பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : வைகாசி 1 (14—5—68) செவ்வாய் ★ வெளியூர் : வைகாசி 2 (15—5—68) புதன் [இதழ் : 276

மே 15-முதல்!

அஞ்சல் கட்டண உயர்வு அமுலாகிறது

புதுடில்லி, மே 14—

மே 15 (புதன்கிழமை) முதல புதிய அஞ்சல் கட்டண உயர்வு செயலுக்கு வருகிறது.

இதுவரையில் 6-காசுக்கு விற்று வந்த அஞ்சல் கார்டு இனி 10 காசுக்கு உயருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் அழியாது--அழிய விடோம்!

எவர் முயன்றாலும் உணர்ச்சி அழியாது என்ற உறுதியுடன் திரும்பியுள்ளேன்

உலகின் எந்தக் கோடியிலிருந்தாலும் தமிழ் மகனுக்குள்ள ஆர்வத்தைக் கண்டறிந்தேன்

சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா தெளிவுரை

சென்னை, மே 12—

"'நாம் செல்லும் நாடுகளில் அறிமுகமாகாத மக்கள் இருப்பார்கள்; அவர்கள் எவ்விதம் நம்மை அணுகுவார்கள்; அவர்களுக்கு நாம் எவ்விதம் விளக்கம் தருவது' என்று எண்ணமிட்டவாறு ஆகாய விமானத்தில் சென்றுகொண்டிருந்தேன்; இரவு 4 மணி இருக்கும்; தெஹ்ரான் எனுமிடத்தில் விமானம் இறங்கியது; அது சவூதி அரேபியா எனும் நாட்டின் விமானத் தளம்; அங்கு விமானம் கால்மணி நேரம் தங்கும் என்று அறிவித்தார்கள்: 'யார் இங்கே நம்மைக் காண வந்திருப்பார்கள்' என்று எண்ணியவாறு நாங்கள், விமானத்தைவிட்டு இறங்காமல்—விமானத்திலேயே இருந்தோம்; ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் விமான நிலைய அதிகாரிகள் வந்து, 'உங்களைக் காண்பதற்குப் பல பேர் வந்து காத்திருக்கிறார்கள்' என்று தெரிவித்தனர்!

"நேரமோ விடியற்காலை 4 மணி; இடமோ, சவூதி அரேபியாவின் தெஹ்ரான் விமானத்தளம்; 'நாம் வருவதைப் பற்றிய அறிவிப்போ இல்லை; இப்படியிருக்க, யார் நம்மைப் பார்க்க வந்திருப்பார்கள்' என்று கருதிச் சென்றோம்; ஆனால், அந்த நேரத்தில்கூட, 50—60 தமிழர்கள்—தமது துணைவியருடனும் குழந்தைகளுடனும், பரிசுப் பொருட்களுடனும் வந்து காத்திருந்தார்கள்; அழகான தமிழ் மொழியில் பேசினார்கள்;—'நீங்கள் வருவது இன்றிரவுதான் தெரியும்; அதுவும், ரேடியோ மூலம்தான் அறிந்துகொண்டோம்; இங்கே எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளில் பணியாற்றுகிறோம்' என்று கூறினார்கள்.

"அவர்கள் விடைபெறுகிற நேரத்தில் ஒன்றை அழுத்திக் கூறினார்கள் 'இணங்கிவிடாதீர்கள்' என்று; 'எதைப் பற்றி' என்று நான் கேட்டேன; 'மொழிப் பிரச்சினையில் நீங்கள் எடுத்த முடிவுதான் சரி; டில்லி எப்படி வலியுறுத்தினாலும் இணங்கிவிடாதீர்கள்' என்று மறுபடியும் கூறினார்கள! அவர்கள் காட்டிய தமிழ் ஆர்வம் கண்டு நான் பூரித்துப்போனேன்!

"அன்று காலை 6 மணி அல்லது 7 மணியிருக்கும்; எங்கள் விமானம் ரோம் நகரை அடைந்தது. அங்கு எங்களை வரவேற்க, சென்னையில் லயோலா கல்லூரியில் பணியாற்றியவரும் தற்போது ரோம் நகரில் போப்பிடம் செயலாளராக இருப்பவருமான டி'செளசா அவர்கள்தான் வந்திருப்பார் என்று எதிர்பார்த்தோம்; ஏனெனில், அவருக்குத்தான் செய்தி அனுப்பினோம்; ஆனால், விமான நிலையத்தில் அவரையும் முந்திக்கொண்டு, 50—60 தமிழ் இளைஞர்கள் எங்களை வரவேற்க வந்தார்கள்; அவர்களைப் பார்த்ததும் நான், 'எப்போது இங்கே வந்தீர்கள்? என்ன காரியத்துக்காக வந்தீர்கள்?' என்று கேட்டேன்; அவர்கள், 'நாங்கள் திருநெல்வேலி, இராமனுதபுரம் பகுதிகளைச் சார்ந்தவர்கள்; கத்தோலிக்கக் குடும்பத்தினர்; ரோமாபுரியிலுள்ள மதக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வந்திருக்கிறோம்' என்று கூறி, எங்களை வரவேற்றார்கள்.

"கடைசியில் அவர்கள் விடை பெறுகிறபோது, 'இணங்கிவிடாதீர்கள்--மொழிப் பிரச்சினையில்' என்று கூறினார்கள்; 'ஏது—நமது நிழல் எங்கே போனாலும் கூடவே வருகிறதே' என நான் நினைத்துக்கொண்டேன்!

"பாரிஸ் நகரில் ஐக்கிய நாடுகள் சங்கத்தில் கல்வி கலாசாரப் பிரிவின் தலைவர் ஆதிசேஷய்யா அவர்களின் விருந்தினராகத் தங்கியிருந்தேன்; அவரும் கடைசியில், 'உங்களுடைய மொழிக் கொள்கையில் மாற்றம் இருக்காது என்று நான் நினைக்கிறேன்' என்றார்; 'மொழிக் கொள்கையில் யார் நிர்ப்பந்தித்தாலும், நீங்கள் ஒரு துளியும் தயக்கம் காட்டமாட்டீர்கள்' என்றும் அவர் கூறினார்!

"இதைப் பொதுவாக உங்களுக்குக் கூறுகிறேன் என்றாலும், தமிழ் பற்றி எண்ணியவாறுள்ள சிவஞானம் போன்றவர்களுக்குக் குறிப்பாகக் கூறுகிறேன்—'உலகத்தின் எந்தக் கோடியில் தமிழன் இருந்தாலும், இங்குள்ள தமிழ் உணர்ச்சியுடனும் எழுச்சியுடனும் இருக்கிறான்' என்று! சவூதி அரேபியாவிலும், ரோமாபுரியிலும், அமெரிக்காவிலும், மற்ற பிற நாடுகளிலும் அந்த அப்பழுக்கற்ற தமிழ் உணர்ச்சியைக் கண்டேன்!

"அந்தத் தமிழ் உணர்ச்சியை அழிக்க யார் முயற்சி செய்தாலும்--எவ்வளவு உயரத்தில் இருப்பவர் முயற்சி செய்தாலும்--எவ்வளவு வலிவுபடைத்தவர்கள் முயற்சி செய்தாலும், 'தமிழ் உணர்ச்சி அழியாது; அழிய விடமாட்டோம்' என்ற உறுதியைப் பெற்றுத் திரும்பி வந்திருக்கிறேன்"

இவ்வாறு அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் வரவேற்பு--பாராட்டு விழாக் கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெள்ளத் தெளிய எச்சரித்தார். அவர் ஆற்றிய உரை வருமாறு:—

மாற்றுக் கட்சித் தோழர்கள் பொறுத்துக் கொள்ளட்டும்!

"நான் கடந்த ஒரு சில நாட்களாகச் சில நாடுகளுக்குச் சென்று திரும்பியதைப் பற்றியும் என்னைப் பற்றியும் இங்கே எனது தோழர்களும், தம்பிமார்களும், தோழமைக் கட்சியினரும் பாராட்டிப் பேசினார்கள்.

இந்தப் பாராட்டுரைகளைக் குறிப்பாகவும்—சிறப்பாகவும் மாற்றுக் கட்சி நண்பர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தி. மு. கழகத்தினர் வெளிநாடுகள் சென்று வராததால் 'கிணற்றுத் தவளைகளாக இருக்கிறார்கள்' என்று அந்த மாற்றுக் கட்சியினர் குறைபட்டுக் கொண்ட காலம் ஒன்றிருந்தது; ஆனால் தி. மு. கழகத்தைச் சார்ந்த பலர் வெளிநாடுகள் சென்று திரும்பியிருக்கிறார்கள், இப்போதுகூட ஆசைத்தம்பி ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருக்கிறார்; நம்முடைய அரங்கண்ணல் ஜப்பான் நாட்டிற்குச் சென்றிருக்கிறார். நாவலர், வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்; அவரது இளவல் செழியன் என்னுடன் தூரக் கிழக்கு நாடுகளுக்கு வந்திருக்கிறார்; எனக்கு முன் அமெரிக்காவுக்குப் போய்வந்திருக்கிறார்; நடாளுமன்ற உறுப்பினர் முத்து உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்; சேலம் இராசாராமும், மனோகரனும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கின்றனர்.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், 'இப்படி வெளிநாடு செல்வது வியப்புக்குரிய ஒன்று' என்பதாலோ, 'யாரும் செய்தறியாத காரியம்' என்பதாலோ கூறிடவில்லை; 'கிணற்றுத் தவளைகள்' என்று எங்களைப் பற்றிக் கூறியவர்களுக்குப் பதிலாக இதைக் கூறுகிறேன்.

நான் வெளிநாடு சென்று வந்ததற்கு இப்படி ஒரு விழா எடுப்பதற்கு, கழகத் தோழர்களுக்கு என்மீதுள்ள பற்றும் பாசமுமே காரணமாகும். அதிலும் குறிப்பாக, அமைச்சரவையிலுள்ள எனது தம்பிமார்களுக்கு நான் எதைச் செய்தாலும் அதிலே ஒரு பெருமையை—பெருமிதத்தைக் காண்பது வழக்கம்; ஆதலால் இந்தச் சிறப்பான விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நம்பிக்கையுடன் நாடு திரும்பியுள்ளேன்

"வெளிநாடுகளில் வானத்தை முட்டும் கட்டிடங்களை நான் பார்த்தேன் என்பது உண்மை; ஆனால், மலர்ந்த முகங்களைக் காணவேண்டும் என்றால், அதை, 'தமிழகத்தில்தான் காண முடியும்' என்பதையும் உணர்ந்திருக்கிறேன்!

(4-ம் பக்கம் பார்க்க)

அறிஞர் அண்ணாவுக்கு பாராட்டு--வரவேற்பு

சென்னை கடற்கரையில் நடைபெற்ற விழாக் கூட்டச் சிறப்பு

இலட்சோப இலட்சம் மக்கள் திரண்டனர்---அமைச்சர்கள் உள்பட அனைவரும் வாழ்த்தினர்

சென்னை, மே 14—

உலகச் சுற்றுப் பயணத்தை முடித்துத் தமிழகம் திரும்பிய முதலமைச்சர் அண்ணா அவர்களுக்குத் திருவல்லிக்கேணி கடற்கரையில் தி. மு. க. தலைமை நிலையச் சார்பில், நேற்று மாபெரும் வரவேற்பு--பாராட்டு விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இலட்சோப இலட்சம் மக்கள் திரண்டிருந்தனர்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்; அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள், அனைவரையும் வரவேற்றார்; அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், சே. மாதவன், சாதிக்பாட்சா, மா. முத்துசாமி; நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் க. அன்பழகன், திரு. அப்துஸ்சமது எம்.பி., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

பல்வேறு மாவட்ட—வட்ட—பகுதிக் கழகங்கள் சார்பிலும், துணை மன்றங்கள்—படிப்பகங்கள் சார்பிலும், தனிப்பட்டோர் சார்பிலும் ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அணிவிக்கப்பட்டன.

வண்ணையைச் சேர்ந்த முஸ்லீம் தோழர் சையத் காதர் என்பவர், மல்லிகை மலர்களாலான ஆள் உயர மாலையையும், மல்லிகை மலர்களாலும் ஜரிகைகளாலும் தயாரிக்கப்பட்ட கிரீடம் ஒன்றையும் அண்ணா அவர்களுக்கு அணிவித்துப் பெருமகிழ்வெய்தினர்.

தருமபுரம் ஆதீனத்தின் சார்பிலும், திருவாவடு ஆதீனத்தின் சார்பிலும் அண்ணா அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்தப்பட்டது.

தமக்கு அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்புக்கும், வாழ்த்துக்களுக்கும் நன்றி தெரிவித்து முதலமைச்சர் அண்ணா அவர்கள், சுற்றுப்பயண அனுபவங்களை விளக்கி அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

பிற நாட்டினர் நல்லெண்ணங்களை நமது நாட்டிற்குக் கொண்டுவந்திருக்கிறேன்

நாட்டின் நலனுக்கு அதனைப் பயன்படுத்துமாறு மத்திய அரசிடம் வற்புறுத்துவேன்

உலகப் பயணத்தினுல் ஏற்பட்ட பலன் பற்றி அறிஞர் அண்ணு விளக்கம்

சென்னை, மே 13—

"பிற நாட்டினரின் நல்லெண்ணங்களையே நான் இந்த நாட்டிற்குக் கொண்டுவந்திருக்கிறேன்; இந்தியாவைப் பற்றி அமெரிக்க நாட்டினர் கொண்டிருந்த சந்தேகத்தைப் போக்குவதற்கு முயற்சியெடுத்து அதில் வெற்றியும் பெற்றேன்; இந்திய அரசினரிடம் இதனைத் தெரிவிக்கப் போகிறேன்; நாட்டின் நலனுக்கு அந்த நாடுகளின் நல்லெண்ணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை ஆராயுமாறு கூறப்போகிறேன்."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் பற்றிச் செய்தியாளர்களிடம் விளக்குகையில் தெரிவித்தார். பல்வேறு நிலைகள் பற்றிச் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது :—

அமெரிக்காவின் வளம் எப்படி வளர்ந்தது?

"இந்தப் பயணம் எனக்கு மகிழ்ச்சியை அளித்தது; பல்வேறு பட்ட அனுபவங்களைத் தந்தது.

நியூயார்க் முதல் சான் பிரான்சிஸ்கோவரையில் நான் பயணம் நடத்தியதில் பொதுப்படையாக என் மனத்தில், அமெரிக்காவின் வேகம்மிகுந்த முன்னேற்றம்—அதன் நவீனத் தன்மை—தொழில் முன்னேற்றம் ஆகியவைபற்றி நல்லெண்ணம் ஏற்பட்டது

நமது நாட்டைப்பற்றி அமெரிக்கர்களிடம் அடிப்படையான நல்லெண்ணம் இருப்பதைக் கண்டேன்.

அமெரிக்க வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள வளம், நாம் பார்த்து பிரமிக்கத் தக்கதாகும்.

பல பேராசிரியர்களிடம் பேசிப் பார்த்ததில், அமெரிக்காவின் இந்த வளம் பல தலைமுறைகளாய்—பல நூற்றுண்டுகளாய் படிப்படியாக வளர்ந்த வளம் ஆகும் என்பதை உணர்ந்தேன்.

தொழில் துறையாக விவசாயம் மாறிவிட்டது!

இந்த வளத்தின் துவக்கமும் அடிப்படையுமாக இருந்தது விவசாயத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியேயாகும்.

இப்போதுகூட பல மாநிலங்களிலும் — குறிப்பாக கான்சாஸ் மாநிலத்திலும் விவசாயம் செழித்தோங்கி இருக்கிறது. விவசாயமே ஒரு தொழில் துறையாக இருக்கிறது.

அந்த விவசாயத்தின்மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு மக்கள் உயர்தரமான—கண்ணியமான வாழ்க்கையை நடத்துகின்றனர். அந்தத் துறையில் கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு பல்வேறுபட்ட தொழிற்சாலைகளில் அந்த விவசாயிகள் பங்குதாரர்களாகவும் இருக்கிருர்கள்.

நட்புணர்ச்சி கண்டு பெருமிதம் கொண்டுள்ளனர்

அமெரிக்காவில் நான் பல இடங்களில் இந்திய நாட்டினரைப் பார்த்தேன்; அவர்கள் டாக்டர்களாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்.

அவர்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வைக் கண்டு மகிழ்ந்தேன். அமெரிக்கர்கள் தங்களிடம் காட்டும் நட்புணர்ச்சி கண்டு அவர்கள் பெருமிதம் அடைந்துள்ளார்கள்.

பெரும்பாலான அமெரிக்கர்கள் 'இந்தியாவின் வறுமை' பற்றிப் பேசுகிருர்கள்; 'இந்தியாவின் திட்டமிடும் வகை சரியல்ல' என்று அவர்கள் கருத்துக் கொண்டிருக்கிருர்கள்.

அந்தக் கருத்தைப் பற்றிய விளக்கத்தைச் சரிவர அவர்கள் தரவில்லை; எனினும் பொதுத் துறை—அரசாங்கத் துறைத் தொழில்கள் சரிவர நடத்தப்படவில்லை என்ற கருத்தைக் கொண்டிருக்கிருர்கள் என்று விளங்கியது.

'சுதந்தரமான வணிகம்' என்ற தத்துவத்தை அமெரிக்கர்கள் இயற்கையாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால், அவர்கள், 'இந்தியாவில் தனிப்பட்ட வணிகத்திற்கு நல்ல ஆக்கம் தந்தால் பொருளாதாரச் சீர்திருத்தமும், வளர்ச்சியும் சிறந்து விளங்கும்' என்ற கருத்தைக் கொண்டிருக்கிருர்கள்.

நான் நம் நாட்டு நிலையை அவர்களுக்கு விளக்கினேன்; எனது வாதத்திலுள்ள நியாயத்தை அவர்கள் உணர்ந்ததை அறிந்தேன்.

இயந்திரத்தின் உதவியை ஏன் அவர்கள் நாடுகின்றனர்!

நான் அவர்களிடம்,

"அமெரிக்காவின் அமைப்பு முறையை முழுக்க முழுக்க நாங்கள்—தற்போதுள்ள இந்திய நாட்டு அமைப்பு முறையில்—ஏற்க முடியாத நிலையில் இருக்கிறேம்; அமெரிக்கர்களது தொழில், மூலதனத்தை அடிப்படையாக வைத்து இயங்குவது; மனித சக்தி அமெரிக்க நாட்டில் குறைவாக இருப்பதால், அவர்கள், இயந்திரத்தின் உதவியைப் பெரிதும் நாடியிருக்கிருர்கள்; இந்தியாவில் பல நூற்றுண்டுகளாகவே தொழில் துறை, வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டியங்குவதாகும்"

என்று நான் கூறியதிலுள்ள பொருளை அவர்கள் புரிந்து கொண்டதை அறிந்தேன்.

பரந்து கிடக்கிறது நிலங்கள் அங்கே!

அமெரிக்காவில் நான் ஒரு விவசாயப் பண்ணைக்குச் சென்றேன். அந்தப் பண்ணை 900 ஏக்கர் நிலப்பரப்புள்ளது. அந்தப் பண்ணையை ஒரு தந்தையும் ஒரு மகனுமே நிர்வகிக்கிருர்கள். அந்தப் பண்ணையின் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அவர்கள் உயர்தரமான-நவீனமான வாழ்க்கையை நடத்துகிருர்கள். அதுபோன்ற பண்ணை நடத்துவது பற்றி திட்டம் ஒன்றையும் அவர்கள் தந்தனர்.

ஆனல் நான் 'எங்கள் நாட்டில் இந்த முறை சரிப்பட்டு வராது; ஏற்கனவே நாங்கள் நில உடைமையை 30 ஏக்கர் என்று ஆக்கியிருக்கிறேம்; மேலும் எங்கள் நாட்டில் 80 சவிகிதத்தினர் விவசாயத்தையே நம்பியிருக்கிருர்கள். ஆகவே, இங்குள்ளது போன்ற பெரும் பண்ணைகளை எங்கள் நாட்டில் இனி ஏற்படுத்துவது என்பது முடியாத காரியமாகும்' என்றேன்.

அமெரிக்காவில்-சில இடங்களில், ஒரு விசித்திரமான நிலை இருக்கிறது. ஒருவரது பண்ணையின் நிலப் பரப்பின் இன்னெரு எல்லையை கண்ணுல் காணுவது முடியாத அளவில் நிலம் பரந்து கிடக்கிறது!

'வெற்றி பெறுவோம்' என இயம்பினேன்...

இந்திய அரசியல்பற்றி அமெரிக்கர்களிடம் ஒரு சந்தேகம் பரவலாக இருக்கிறது; இந்தியாவில் நாம் அரசியலில் நிலையான தன்மையை நீண்டகாலம் பெற்றிருப்போமா? சனநாயக அடிப்படையில் நீண்டகாலம் இயங்குவோமா என்பதுதான் அந்தச் சந்தேகம்! அந்தச் சந்தேகத்தைப் போக்க நான் முயற்சி எடுத்தேன்; அதில் நல்ல வெற்றியும் பெற்றேன்.

அரசியல் நிலைத் தன்மையிலும் சனநாயக அமைப்பு முறையிலும் வெற்றி பெறுவோம் என்று எடுத்துரைத்தேன்.

விருப்பத்திற்கு மாருக மொழித் திணிப்பா?

இந்தியாவின் மொழிப் பிரச்சினை பற்றியும் அவர்கள் அறிந்து வைத்திருக்கிருர்கள்; விருப்பத்திற்கு மாருக இந்தி திணிக்கப்படுவதையும், அது இந்தியாவின் நலத்திற்கே உகந்ததல்ல என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கிருர்கள்.

ஒரு பேராசிரியர் என்னிடம், 'பல்வேறு இன—மொழி மக்களைக் கொண்டிருந்தபோதும் அமெரிக்காகூட ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடியது; சுதந்தரம் பெற்றேம்; எனினும், ஆங்கிலத்தை நாங்கள் 'விட்டுவிடவில்லை' என்று கூறினர்.

குறைந்த காலத்தில் வளமிக்க வாழ்வு!

அமெரிக்காவை அடுத்த போர்ட்டே ரீகோ எனும் சிறு நாட்டிற்குச் சென்றேம்; அமெரிக்காவுடன் அந்த நாடு பொதுவான உடன்பாடு கொண்டிருக்கிறது.

அந்தச் சிறு நாடு, குறைந்த காலத்தில் வாழ்க்கைத் தரத்தில் விரிவான முன்னேற்றத்தையும், வேகமான தொழில் முன்னேற்றத்தையும் அடைந்ததைக் கண்டோம்!

'முன்னேற வேண்டும்' என்ற உணர்வு அங்கு!

ஜப்பானை நான் சில ஆண்டுகளுக்குமுன் ஏற்கனவே பார்த்திருக்கிறேன். அந்தச் சில ஆண்டுகளில்கூட மிகப் பெரிய முன்னேற்றத்தை ஜப்பானில் கண்ட பரவசமூட்டும் உணர்ச்சி என்னவென்ருல்,

நாடு முழுவதுமே, 'தொழிலில்—வாணிபத்தில் முன்னேற்றம் அடைந்த நாடுகளையும் மிஞ்சிவிடவேண்டும்' என்ற உணர்ச்சி எங்கெங்கு நோக்கினும் நிரம்பியிருந்தது

அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும்—கருத்து சித்தாந்த வேறுபாடுகள் இருந்தாலும்—தொழிலில் அவர்கள் காட்டும் 'மனம் ஒன்றிய தன்மை' பாராட்டத்தக்கது.

வியப்புடன் அவர்கள் என்னிடம் கேட்டனர்!

சேலம் இரும்பாலைபற்றி முன்னுள் தொழிலமைச்சர் வெங்கட்ராமன் நடத்திய பேச்சு வார்த்தைகளைப் பற்றி ஜப்பானிலுள்ளவர்கள் எடுத்துரைத்தார்கள். தொழில் நிபுணர்களையும் சந்தித்தேன்; அவர்கள், சேலம் பற்றி மிகுந்த அக்கறை காட்டினுர்கள்; 'ஏன் இன்னும் சேலம் இரும்பாலையைத் துவக்காமல் இருக்கிறீர்கள்' என்று அவர்கள் மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டார்கள்; சிலர், சேலம் இரும்பாலைத் திட்டத்திற்குரிய அந்நியச் செலாவணி பெறுவதுபற்றியும் சில யோசனைகளைத் தெரிவித்தனர்; நான், இந்த யோசனைகளை மத்திய அரசிடம் தெரிவிப்பதாகக் கூறினேன்; அதோடு 'நான் காவது திட்டத்தின் போக்கையும் கவனிக்கவேண்டியிருக்கிறது' என்றும் கூறினேன்.

ஒரு ஜப்பானியக் கம்பெனியினர், 'சேலம் இரும்பு மூலப் பொருள்களை எடுத்துக் கொண்டு அதற்குரிய அந்நியச் செலாவணியைத் தருகிறேம்; அதை வைத்து இரும்பாலை நிறுவலாம்' என்ற யோசனையைக் கூறினர்; 'இதுபற்றியும் மத்திய அரசிடம் தெரிவித்து வாதாடுகிறேன்' என்று நான் கூறினேன்.

தயாராக உள்ளனர்!

ஜப்பானிலுள்ள விவசாயக் கருவிகளை (பவர் டிரில்லர் போன்றவை) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்குச் சென்றேம்; அங்கு அந்தக் கம்பெனியின் கருவிகளைப் பயன்படுத்துவதில் நமது விவசாயிகளுக்குள்ள சிரமங்களை அவர்களிடம் எடுத்துரைத்தேன்.

அந்தக் கம்பெனியார், மேலும் ஒரு கூட்டுக் கம்பெனியை இந்தியாவில் ஏற்படுத்தத் தயாராக இருப்பதாகக் கூறினர்.

ஏற்கனவே அவர்கள், தமிழ்நாட்டில் (வி.எஸ்.டி. மோட்டார் நிறுவனத்தாருடன்) ஒரு கூட்டுக் கம்பெனி அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்; எனினும், மேலும் ஒரு கம்பெனி துவங்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

மேலும் சங்கடத்தில் ஆழ்த்த இயலுமா?

அமெரிக்காவில் மண் வாரும் இயந்திரங்கள் செய்யும் தொழிற்சாலையைப் பார்க்க இருந்தேன்; ஆனல், முன்பே அவர்கள் இந்தியாவில் ஒரு கம்பெனியுடன் கூட்டுத் தொழில் நடத்த முற்பட்டதாகவும், அதற்குச் சரியான முக்கியத்துவத்தை இந்திய அரசினர் தரவில்லை என்றும் அறிந்தேன்.

'மேலும் அவர்களை சங்கடத்தில் ஆழ்த்துவானேன்' என்று கருதி அவர்களைச் சந்திக்கவில்லை.

செய்தியை எடுத்துச் செல்லும் தூதுவன்தான் நான்!

பிரான்சு நாட்டில் ரெனல்ட்ஸ் மோட்டார் கம்பெனியைப் பார்த்தேன்; அவர்கள், தமிழகத்தில் சிறிய கார்கள் செய்யும் ஒரு தொழிற்சாலையை நிறுவ ஆர்வம் காட்டினுர்கள்

"இந்தியக் கூட்டாட்சி முறையில் நான் இந்தச் செய்தியை எடுத்துச் செல்லும் தூதுவனுக இருக்க முடியுமே தவிரக் கம்பெனி அமைப்பது பற்றி முடிவு செய்பவனல்ல"

என்று கூறினேன்.

வெற்றி கிடைப்பதைச் சுட்டிக் காட்டினேன்

யேல் பல்கலைக் கழகத்திலும், கான்சாஸ் பல்கலைக் கழகத்திலும், வேறு சில பல கல்லூரிகளிலும் பேராசிரியர்களையும், மாணவர்களையும் சந்தித்தேன்; அவர்களில் சிலர், 'ஆசியப் பிரச்சினை—குறிப்பாக இந்தியப் பிரச்சினை' பற்றிச் சிறப்பான ஆராய்ச்சி செய்துவருவதைக் கண்டேன்.

இந்தியாவில் மக்கள் தொகை வளருவது பற்றி அவர்கள் கவலை தெரிவித்தனர்; தமிழகத்திலும் மராட்டியத்திலும் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் வெற்றி கிடைத்து வருவதை அவர்களுக்குச் சுட்டிக் காட்டினேன்.

'அபாயம் இல்லை' என்பதை விளக்கினேன்.

"இந்தியாவின் மத்திய அரசு நிலைக்குமா? காங்கிரசு தொடர்ந்து ஆளுமா? கூட்டு அரசாங்கம்—தேசிய அரசாங்கம் வருமா?' என்றெல்லாம் கேட்டனர்.

ஒருவர் கேட்டார், 'டில்லியில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டு உங்களை அதில் பங்கேற்க அழைத்தால் என்ன செய்வீர்கள்?' என்று; 'நான் அந்த ஆசைவலையில் ஆட்பட மறுப்பேன்' என்று கூறினேன்.

மேலும், 'மத்திய அரசுக்குத் தற்போது உடனடியான அபாயம் இல்லை' என்பதையும் அவர்களிடம் நான் விளக்கினேன்.

அந்த எண்ணம் தோன்றக் காரணம்?

"உங்களுடைய அரசைக் கவிழ்க்க டில்லி முயற்சி செய்கிறதா?" என்றும் அவர்கள் கேட்டனர்; அதற்கு நான், 'அதுபற்றி எனக்கு அவ்வளவு ஆர்வம் இல்லை' என்றேன்.

ஒரு நிருபர் :—" ஏன் அப்படிக் கூறினீர்கள்?"

அண்ணு :—" நான் ஆட்சியில் இருப்பதைவிட எதிர்க் கட்சியில் இருந்தால் இன்னும் பலமுள்ளவனுக இருப்பேன். அதோடு, எனது அமைச்சரவையைக் கவிழ்க்க டில்லியில் கடுமையான முயற்சி செய்வதாக எனக்குத் தெரியவில்லை!

இப்படிப்பட்ட எண்ணம் அமெரிக்கர்களுக்குத் தோன்றுவதற்குக் காரணம், இந்தியாவில் காங்கிரசல்லாத அரசுகள் தானுகவே கவிழ்ந்துவிடுவதாலும், பிறரால் கவிழ்க்கப்படுவதாலும்தான்!

நான் அவர்களிடம், 'இங்கு சனநாயகக் கட்சிக் குடியரசுத் தலைவர் இருந்தும், மாநிலங்களில் ரிபப்ளிக்கன் கட்சி கவர்னர்கள் கவிழ்க்கப்படாமல் ஆட்சி நடத்துவதில்லையா?' என்றும் கூறினேன்."

(4-ம் பக்கம் பார்க்க)

நகராட்சிகளின் வருமானம் பெருக வழி

அமைச்சர் மா. முத்துசாமி யோசனை

பஸ் -- திரைப் படக் கொட்டகைகள் நடத்துவதுபற்றியும் கருத்துரை

சென்னை, மே 14—

"நகராட்சி மன்றங்களின் வருவாயைப் பெருக்கிக் கொள்ள கடைகள் கட்டி வாடகைக்கு விடலாம்; வண்டிகள்மீது (ஒரு இருக்கைக்கு இவ்வளவு என்ற அடிப்படையில்) நகர செஸ் வரி விதிக்க அனுமதிக்கலாம்"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் யோசனை தெரிவித்தார்.

தமிழ்நாடு நகராட்சிமன்றத் தலைவர்கள்—ஆணையாளர்களின் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"நகராட்சிப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நகராட்சிகள், அரசியல் தலைவர்களை உருவாக்கும் பயிற்சிப் பண்ணையாக இருக்கலாமேயன்றி, அரசியல் போர்க்களமாக மாற அனுமதிக்கக்கூடாது.

எக்காரணத்தைக் கொண்டும் அரசியல் இரசாபாச உணர்ச்சிகளுக்கு நகராட்சிமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும், ஆணையர்களும் இடம் தரக்கூடாது; நகராட்சிமன்றத் தலைவர்களும், ஆணையர்களும், கணவன்-மனைவிபோல அன்பு பூண்டு பணியாற்றவேண்டும். இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலை பல நகராட்சிமன்றங்களில் உள்ளன."

குடிநீர்த் திட்டம்

நகராட்சிமன்றங்களின் தேவைகள் பற்றிக் குறிப்பிட்டு அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் உள்ள 84 நகராட்சிகளில் கிட்டத்தட்ட 69-ல் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது; 9 நகராட்சி மன்றங்களில் வேலை நடந்து வருகிறது; எஞ்சியுள்ளவற்றிற்கும் குடிநீர் வசதி செய்து தருவது அரசின் கடமையாகும்.

குடிநீர்த் திட்டம் உள்ள பகுதிகளில்கூட குடிநீர்ப் பற்றுக்குறை ஏற்படுகிறது. குடிநீர்த் திட்டம் உள்ள ஒவ்வொரு நகராட்சியிலும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டாக வேண்டும்; ஆனல் நிதி நிலைப் பற்றுக்குறை காரணமாக இதை விரிவுபடுத்த முடியவில்லை.

உயர்நிலை நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கின்றது; ஆனல் நிதி நிலைப் பற்றுக்குறை காரணமாக அவற்றை எடுத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

ஆகையால், 'நகராட்சிப் பள்ளிகளுக்கு மானியத் தொகையை அதிகரிக்கலாமா' என்று அரசு ஆராய்ந்து வருகிறது. மிக விரைவில் மகிழ்ச்சியுறத்தக்க நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புகிறேன்"

பஸ் போக்குவரத்து

"பெருந்து (பஸ்)களையும், திரைப்படக் கொட்டகைகளையும் நகராட்சி ஏற்று நடத்த அரசு அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை பற்றி அமைச்சர் குறிப்பிட்டதாவது :—

"இந்தக் கோரிக்கை பற்றி பன்முறை சிந்திப்பது அவசியம். சென்னை நகரில் ஏராளமான பஸ்களை வைத்து சிறந்த அமைப்பின் உதவியுடன் அரசாங்கமே நடத்தும் பஸ் போக்குவரத்து நட்டத்தில் நடக்கிறது.

இப்படியிருக்கையில், நகராட்சிகளால் குறைந்த பஸ்களை வைத்து இலாபம் சம்பாதிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை; எனவே இதில் அவசரப்பட்டு முடிவு செய்யக் கூடாது.

திரைப்படக் கொட்டகைகள்

திரைப்படக் கொட்டகைகளை வாங்கவும், புதியவற்றைக் கட்டவும் பல இலட்சக்கணக்கான ரூபாய் மூலதனம் தேவை. ஊரில் மையமான நல்ல இடம் கிடைப்பதும் கடினம். ஆகவே இதுவும் நகராட்சிகளுக்கு ஏற்றதென்று நான் நினைக்கவில்லை."

நகராட்சித் தேர்தல்கள்

நகராட்சிகளுக்குத் தேர்தல், திட்டப்படி செப்டம்பர் இறுதியில் அல்லது அக்டோபர் முதல் வாரத்திஸ் நடைபெற வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது; தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

நகராட்சி மன்றங்கள் இப்போதிருந்தே இதற்கான ஆயத்த வேலைகளைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் இயற்கையான பண்பாட்டிலிருந்து நழுவாமல், கட்சி வேறுபாடுகளுக்கு இடம் தராமல் நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும்.

சட்டத் திருத்தம்

நகராட்சிச் சட்டத்தைத் திருத்துவது பற்றி நகராட்சித் தலைவர்கள் மாநாடு கருத்துத் தெரிவித்தால் அதை அரசாங்கம் ஆலோசிக்கும்.

நிதிப் பற்றாக்குறை இருப்பினும், நகராட்சி மன்றங்களுக்கு அரசு உதவி கால்காசுகூடக் குறைக்கப்படவில்லை; அவ்வாறு குறைக்கப்பட்டதாக தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் கூறியிருப்பது சரியல்ல!

நகர அமைப்புத் திட்டங்களுக்கு மத்திய உதவி வெட்டப்பட்டதன் விளைவாக அவற்றிற்கு மட்டும் மாநில அரசின் உதவி குறைக்கப்பட்டிருக்கிறது."

சனநாயகம் வளரும் தொட்டிலாக உள்ளாட்சிமன்றங்கள்

கட்சி அடிப்படைத் தேர்தல் தவிர்க்கப்படுமா?

அமைச்சர் மு. கருணாநிதி கருத்துரை

சென்னை, மே 14—

"ஊராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும் 'சனநாயகத் தொட்டில்'களாக விளங்கிவருகின்றன; சனநாயகம் இவைகள் மூலம் வேரூன்றுகின்றன!

"பண்டைக் காலத்திலிருந்தே சிறந்த சனநாயகப் பண்புகளாக நகராட்சிகள் அமைந்து செயல்பட்டு வந்திருக்கின்றன"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் நகராட்சித் தலைவர்கள் மாநாட்டில் பேசுகையில் விளக்கினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நகராட்சிகளும், ஊராட்சி மன்றங்களும் வெறும் அழகை மாத்திரம் மனத்தில் வைத்துக் கொண்டு வளர்ச்சிப் பணிகளைச் செய்யக்கூடாது; சுகாதார அடிப்படையில் பிரச்சினைகளை அணுக வேண்டும்.

"தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள பகுதி—சுகாதாரக் குறைவுள்ள பகுதிகளில் விளக்குகள் போடுவது போன்றும் சீரமைப்புச் செய்தல் போன்றும் அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றத்தக்க வகையில் நகராட்சியின் முக்கிய தொண்டுகளாக அமைய வேண்டும்."

நடைபெறவிருக்கும் நகராட்சித் தேர்தல்களைக் குறிப்பிட்டு அமைச்சர் கூறியதாவது :—

"முதலமைச்சர் அறிஞர் அண்ணவின் விருப்பப்படி, நகராட்சித் தேர்தல்களில் கட்சி ரீதியாகப் போட்டியிடாமல், அனைத்துக் கட்சி ஒப்பந்தம் ஏற்பட்டால் மிகவும் நல்லது. அதற்குக் காரணம், உள்ளாட்சி மன்றங்கள் கொள்கையை உருவாக்குகிற இடமல்ல—கொள்கை உருவாகிற இடங்கள் சட்டமன்றங்களும பாராளுமன்றங்களும் ஆகும்.

"ஒருகால் அம்மாதிரியான ஓர் அனைத்துக் கட்சி ஒப்பந்தம் தேர்தலுக்குள் ஏற்படாவிட்டால், தேர்தல்கள் முடிந்த பிறகாவது ஏற்படும் புதிய நகராட்சிகள் கட்சி வேற்றுமைகளை மறந்து தொண்டாற்ற வேண்டும்.

'மொத்தம் இருக்கின்ற 64 நகராட்சிகளில் 40 காங்கிரசுக் கட்சி வசமிருந்தும் புதிய அரசுடன் அவை கட்சி வேறுபாடின்றி முழு அளவில் ஒத்துழைத்து வருவதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

நகராட்சிகட்கு ஆயுள் இன்சூரன்சு நிறுவனத்தின் மூலம் கடன்

அரசு ஆலோசிப்பதாக அமைச்சர் சாதிக் பாட்சா அறிவிப்பு

சென்னை, மே 14 —

"சுகாதாரத் துறையில் நகராட்சிகள் தீவிர கவனம் செலுத்த வேண்டும்; கலப்படத் தடுப்புச் சட்டம், நகரமைப்புச் சட்டம் ஆகியவற்றைத் தயவுதாட்சண்யமின்றி செயல்படுத்த வேண்டும்"

என்று சுகாதாரத் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, நகராட்சித் தலைவர்கள் மாநாட்டிற்குத் தலைமைவகித்து பேசுகையில் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறியதாவது :—

"நகரமைப்பு (டவுன் பிளானிங்) சட்டத்தில் மாறுதல் செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டடம் கட்டுவதை ஆரம்பக் கட்டத்திலேயே தடுப்பது அவசியமாகும்; சட்டடம் முடிந்த பிறகு இடிக்க விரும்பாததால் சட்டம் பயனில்லாமல் போய் விடுகிறது.

குடிநீர்த் திட்டங்களுக்காக நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பொரேஷன் மூலமாகக் கடன் எழுப்பி நிதி உதவி செய்ய அரசு ஆலோசித்துவருகிறது.

கழகத்தேர்தல்கள் ஒத்திவைப்பு

★

நகர -- பெருநகரக் கிளைகள்; சென்னை வட்டக் கிளைகள் தேர்தல் நாள் ஒத்திவைப்பு

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நகர—பெருநகரக் கிளைகளின் தேர்தல்கள்,

ஜூன் 8, 9 (சனி, ஞாயிறு)

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அதேபோல்,

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சென்னை வட்டக் கிளைகளின் (டிவிஷன் கிளைகள்) தேர்தல்கள்

ஜூன் 1, 2 (சனி, ஞாயிறு)

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அடுத்து வட்ட—மாவட்ட தலைமைக் கழகத் தேர்தல்களுக்கான நாட்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

அறிவகம்', சென்னை-13
10—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், மூங்கில்துறைப்பட்டு அஞ்சல், கள்ளக்குறிச்சி தாலுக்கா, தெ. ஆ. மாவட்டம்

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கீழ்க்கண்ட பதவிகளில் பணியாற்ற, தகுந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பங்கள், கீழ்க்குறிப்பிட்டுள்ள அதிகாரிக்கு 25-5—68-ஆம் தேதிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அதில் தங்களுடைய பெயர், தகுதி, வயது, முன் அனுபவம், தற்பொழுது பெறும் ஊதியம், எதிர்பார்க்கும் ஊதியம், வேலைக்கு எடுத்துக்கொண்டால் வேலையில் சேர்வதற்கு வேண்டிய அவகாசம் முதலியவைகளைக் குறித்து அனுப்ப வேண்டும்.

தகுதி

1.	துணைத் தலைமைப் பொறியாளர்	(1)	அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகங்களின் பொறியியல் பிரிவில் பி.இ. பட்டம் பெற்றவரும், சர்க்கரை ஆலையில் குறைந்தது 10 வருட முன் அனுபவமும், இதே வேலையில் குறைந்தது மூன்று வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.
	சம்பள விகிதம் :		ரூ 600-40-1000-E.B.-1200 (பஞ்சப்படி கிடையாது). தகுந்த நபருக்கு ஆரம்பச் சம்பளம் கூடுதலாக நிர்ணயிக்கப்படும்.
2.	உதவிக் கரும்பு அதிகாரி	(5)	பி.எஸ்சி. (விவசாயம்) பட்டம் பெற்றவர்கள் கரும்பு அபிவிருத்தியில் குறைந்தது 5 வருட முன் அனுபவம் தேவை; சர்க்கரை ஆலைகளில் வேலை செய்த முன் அனுபவம் இருப்பது நல்லது.
	சம்பள விகிதம் :		ரூ. 300-25-425-E.B.-25-600. சர்க்கரை ஆலைகளுக்கான சம்பளக் குழுவின் சிபாரிசுப்படி பஞ்சப்படி கொடுக்கப்படும். தகுந்த நபர்களுக்கு ஆரம்பச் சம்பளம் கூடுதாக நிர்ணயிக்கப்படும்.

எஸ். டி. வைத்திலிங்கம், எம்.ஏ., எம்.லிட்.,
பொது நிர்வாகி

'அதிகாரச் சாயல்'களற்ற அமைதிமிக்க ஊர்வலம்

'ஆட்சி வேறு---கட்சி வேறு' என்ற அண்ணாவின் அறிவுரை உறுதிபெற்றது

ஆட்சியிலிருந்தும் எவ்விதப் பாதுகாப்புமின்றி 'எளிய குடிமகன்'களாகப் பவனி வந்தனர் கழக முன்னணி வீரர்கள்!

வெளிநாட்டவர் வியந்தனர் -- திரண்டிருந்த பொதுமக்கள் மெய்சிலிர்த்தனர்!

சென்னை, மே 14—

உலகச் சுற்றுப்பயணம் செய்து தாயகம் திரும்பிய பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களைச் சிறப்பிக்கும்வகையில், தி மு. கழகத்தோழர்கள் அணிவகுத்துச் சென்ற ஆர்வமிக்கதோர் ஊர்வலம், அமைதியுற நடைபெற்றது.

'ஆட்சி வேறு -- கட்சி வேறு' என்ற அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைக்கேற்ப நடைபெற்ற இந்த ஊர்வலத்தில், 'ஆட்சியின் சாயல்'கள் ஏதுமின்றி -- 'அமைச்சர்கள்' என்ற தோரணையின்றி --- கழக முன்னணி வீரர்களான இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, மதியழகன், என். வி. என்., சாதிக் பாட்சா, முத்துசாமி ஆகியோருடன் அண்ணா அவர்கள், தேர் போன்று அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் சாதாரண குடிமகனைப்போல் பவனி சென்றதைக் கண்ட வெளிநாட்டவர் வியந்தனர்! ஊர்வலம் சென்ற பாதைகளில் திரண்டு நின்ற மக்கள் மெய்சிலிர்த்தனர்!

தாழ்ந்த தமிழகம் தலைநிமிரவும், தமிழரின் வாழ்வு சீர்பெறவும் போராடிய 'விடுதலை வீரர்'கள் நேற்று அணிவகுத்துச் சென்ற காட்சி, சென்னைக்கு மற்றொரு சிறப்பினைத் தேடித் தந்தது!

ஊர்வலத்தில் பங்கேற்கவும், வரவேற்பு—பாராட்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், ஆந்திரம் — கேரளம்—கருநாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த கழகத் தோழர்கள், ஊர்வலத்திற்கு எழில் கூட்டினர்!

ஊர்வலத்தில், தி. மு. கழகத் தோழர்களும், சார்பு – துணை மன்றத் தோழர்களும் கழகக் கொடிகளுடன் கலந்துகொண்டு, எவ்வித ஆரவாரமும் இன்றி, அமைதியாக அணிவகுத்துச்சென்ற காட்சி, சென்னைக்குப் புதியதோர் பெருமையைச் சேர்த்தது.

ஊர்வலம் சென்ற பாதையின் இருமருங்கிலும் பொதுமக்கள் —தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுடன் — திரண்டிருந்து, 'அமைச்சர்கள்' என்ற பெருமிதமின்றி — பாதுகாப்புகள் ஏதுமற்று எளிய குடிமகன்களைப்போல் அமர்ந்திருந்த காட்சியினைக் கண்டு, அகமும் முகமும் மலர வாழ்த்துக் கூறி, மலர்களையும், மலர் மாலைகளையும் அள்ளி வீசினர்!

மாலை 5 மணியளவில், 'அன்பகத்'திலிருந்து ஊர்வலம் புறப்பட்டபோது, கழகத் தோழர்கள் உற்சாக மிகுதியால் வாழ்த்தொலிகள் மட்டுமே எழுப்பிவந்தனர். வழிநெடுகிலும் அதிர்வேட்டுகள் முழங்கின!

ஊர்வலம் ரவுண்டாணாவில் அண்ணா சிலையை நெருங்கிய போது மக்களின் ஆரவாரம் எல்லையற்றுவிட்டது!

ஊர்வலக் காட்சிகள் திரைப்படமாக்கப்பட்டன.

செய்தியாளரிடம் அறிஞர் அண்ணா விளக்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபர்:—"பாரிசில் தாங்கள் இருந்தபோது, மாணவர் கிளர்ச்சி நடைபெற்றதா?"

அண்ணா:—"இல்லை; நான் அங்கிருந்து போன பிறகுதான் நடைபெற்றது."

நிருபர்:—"ஒருவேளை சமாதான விரும்பியான தாங்கள் அங்கு இருந்ததால் மாணவர் கிளர்ச்சி நடைபெறவில்லையோ!"

'நானும் முயற்சிக்கிறேன்' என்றார் போப்பாண்டவர்!

அண்ணா:— "போப்பாண்டவரைச் சந்தித்தபோது, அவரிடம், ஒரு சில இந்திய நண்பர்கள் தந்த மனுவைத் தந்தேன்; 'போப்பாண்டவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, போர்ச்சுகலில் சிறையிருக்கும் இரு இந்திய நாட்டினரை (கோவா விடுதலைப் போராட்டம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களை) விடுவிக்க வேண்டும்' என்று நான் தந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது; அதற்குப் போப்பாண்டவர், 'இது அங்குள்ள அரசு கவனிக்க வேண்டியது; ஆயினும், நானும் முயற்சி செய்கிறேன்' என்றார்.

டெலிவிஷனை அல்ல --- மக்களைத்தான்!

அமெரிக்கா முழுவதும் இப்போது தேர்தல் வேகத்தில் இருக்கிறது; கடந்த தேர்தல்களைவிட இந்தத் தேர்தல் மும்முரமாக இருக்கிறது.

முன்பு அவர்கள் தேர்தலில் பெரும்பாலும் டெலிவிஷனை நம்பியிருந்தார்கள்; இந்தத் தேர்தலில், வேட்பாளர்கள், தனிப்பட்ட முறையில் மக்களைச் சந்திக்கிறார்கள்.

காரில் சென்றுகொண்டிருக்கும் போது, ஏதாவது ஒரு கடையில் இருநூறு பேர் இருந்தாலும், உடனே இறங்கி அவர்கள், வேட்பாளர்களைச் சந்திக்கின்றனர்!

களிமண் அல்ல -- சிமெண்டுதான் அதிகம்

அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களைச் சந்தித்தேன்; அவர்களின் கூர்த்த மதியைக் கண்டு மகிழ்ந்தேன்.

நிருபர்:— "அமெரிக்காவில் மாணவர் கிளர்ச்சி உண்டா? களிமண் வீச்சு நடைபெறுவது உண்டா?"

அண்ணா:—"களிமண் அதிகமில்லை; அங்கு சிமெண்டுதான் அதிகம்! உள்ளபடியே, நியூயார்க்கில் நான் பார்த்தேன்—ஒரு தாய், ரோஜாச் செடியுள்ள மண் தொட்டியிலிருந்து களிமண்ணை எடுத்துத் தனது மகனிடம், 'இதுதான் களிமண்' என்று காட்டியதைப் பார்த்தேன்!"

அது என் வேலையல்ல-- அவர்களது உரிமை அது!

நிருபர்:— "தாங்கள், 'தங்கள் பயணத்தின் மூலம் கொண்டு வந்தது என்ன?"

அண்ணா:—"பிற நாட்டு மக்களின் நல்லெண்ணம்."

நிருபர்:—"அதன் பயன் என்ன?"

அண்ணா:—"நமது டில்லி அரசிடம் அதைத் தெரிவித்து, அதை நல்ல முறையில் பயன்படுத்துமாறு கேட்பேன்."

அமெரிக்காவில் சிலர் என்னைக் கேட்டார்கள்—'நீங்கள் ஏதாவது உதவி பெறத்தான் அமெரிக்கா வந்தீர்களா?' என்று; 'அது என் வேலையல்ல; அது, மத்திய அரசுக்கே உரிய ராஜாங்க ஏகபோக உரிமை' என்றேன்!

எரிச்சலூட்டும் முறையைத் தவிர்த்தால்!

நிருபர்:—"தமிழகத்தில் தொழிற்சாலை ஏற்படுத்துமாறு அமெரிக்காவில் அழைப்பு விடுத்தீர்களா?"

அண்ணா:—"அமெரிக்காவிலோ, ஜப்பானிலோ அப்படி அழைப்பு விடவில்லை; ஹாங்காங்கில் இந்தியாவைச் சார்ந்த வணிகர்கள், வணிகச் சங்கச் சார்பில் எனக்கு வரவேற்பு அளித்தனர்; அந்த வரவேற்பில் அந்தச் சங்கச் செயலாளர், 'இந்தியாவுக்கு வெளியேயுள்ள இந்தியர்களிடம் ஏராளமான பணமும், அந்நியச் செலாவணியும் இருக்கிறது; இந்திய அரசு சரிவர ஒத்துழைப்புத் தந்தால்—சில சலுகைகளை அளித்தால் — எரிச்சலூட்டும் அரசாங்க 'சிவப்பு நாடா' முறைகளைத் தவிர்த்தால் — இந்திய வணிகர்களே இந்தியாவில் தொழில் துவங்குவார்கள்' என்றார்; அதன்பேரில்தான் நான், 'இந்திய அரசிடம் இதுபற்றி வாதாடுகிறேன்; 'நீங்கள் தொழில் துவங்க இந்தியா வாருங்கள்' என்று அழைத்தேன்; மேலும், 'இதுபற்றி விரிவான மனு தர வேண்டும்' என்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

நீக்ரோவர் தகராறு ஏற்படக் காரணம்?

அமெரிக்காவிலுள்ள நீக்ரோ பிரச்சினைக்குத் தீர்வுகாண அமெரிக்காவின் அறிவுமிக்க மக்களும், இளைஞர்களும் மிகத் தீவிரம் காட்டுகின்றனர்.

நீக்ரோக்கள் அதிகம் வாழும் பகுதியான 'ஹார்லம்' எனுமிடத்திற்கு மன்ஹாட்டன் நகரத் தலைவருடன் சென்றேன்; அவரே ஒரு நீக்ரோ என்பதை இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் பத்திரிகையில் படித்துத் தெரிந்துகொண்டேன்; அந்த அளவுக்கு அந்த நீக்ரோக்கள் வெள்ளையரைப் போலவே இருக்கிறார்கள்.

நீக்ரோக்களின் பகுதியில் வெள்ளையர்கள் சமூகப் பணி புரிகிறார்கள். இதுபற்றி நீக்ரோ இளைஞர்களில் சிலர் அலட்சியம் காட்டினாலும், நீக்ரோக்களில் வயது வந்தோர் எல்லோரும் அக்கறை காட்டுகிறார்கள்

நீக்ரோ பகுதியான ஹார்லமில் வீடுகள் தாழ்ந்தும், பழுதடைந்தும், மக்கள் நெருக்கமுள்ளதாயும் இருக்கின்றன.

கோடைக் காலத்தில் வீட்டில் இருக்க முடியாமல், வெளியே அவர்கள் சுற்றவேண்டி வருகிறது; கோடைக்காலத்தில் அதிகமான தகராறுகள் ஏற்பட இதை ஒரு காரணம் காட்டுகிறார்கள்.

நீக்ரோக்கள் அரசியலில் குடியரசுக் கட்சியையும், சனநாயகக் கட்சியையும் ஆதரிக்கிறார்கள்.

நெய்வேலி - 2 பேரூர்க் கிளை

ஆணையாளர்

எஸ். இராமச்சந்திரன்

எம்.எல்.ஏ.

தெ. ஆ. மாவட்டம் நெய்வேலியில், நெய்வேலி-2 – மந்தாரக்குப்பம் – கங்கைகொண்டான் ஆகிய மூன்று பகுதிகளிலிருந்தும் தனித்தனியாக உறுப்பினர்களைச் சேர்த்து அனுப்பியுள்ள அமைப்புகளை ஒன்றாகச் சேர்த்து, ஒரே பேரூர்க் கிளையாக 'நெய்வேலி-2 கிளை' என்ற பேரால் அமைப்பதற்காகச் சம்பந்தப்பட்ட தோழர்களை அணுகி ஆவன செய்யவும், நெய்வேலி-2 கிளையின் தேர்தல்களை முறைப்படி நடத்தும் தேர்தல் ஆணையாளராகவும், தோழர் எஸ். இராமச்சந்திரன் பி.ஈ., எம்.எல்.ஏ. அவர்கள் தலைமைக் கழகச் சார்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேற்காணும் மூன்று பகுதித் தோழர்களும், விருத்தாசலம் வட்ட தி. மு. க. செயலாளர்—நிர்வாகிகளும், தோழர் இராமச்சந்திரன் அவர்கள் பணிக்கு உறுதுணை புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
சென்னை-13
12—5—68

—தலைமைக் கழகம்
(தி.மு.க.)

தமிழ் அழியாது.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செல்வம் கொழிக்கும் நாடுகளைப் பார்த்தேன் என்பது உண்மை; ஆனால், கனிவான கருத்துச் செல்வத்தைப் பெற வேண்டுமானால், திருப்பத் தமிழகத்திற்குத்தான் வரவேண்டும் என்பதையும் உணர்ந்தேன்!

தொழில் துறையிலும், மற்ற துறைகளிலும் 'வளர்ந்த நாடுகளைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன்; அதே விதமான வளர்ச்சியை அடைய முடியாதோ' என்ற ஏக்கத்துடன் திரும்பி வரவில்லை; 'அதேவிதமான வளர்ச்சி அடைய முடியுமா' என்ற திகைப்புடனும் திரும்பி வரவில்லை; 'அதேவிதமான வளர்ச்சியை இங்கே அடையமுடியும்' என்ற நம்பிக்கையுடன் திரும்பி வந்திருக்கிறேன்! நம்மைவிடக் குறைவான வளமுள்ள நாடுகள் முன்னேறியிருப்பதைக் கண்டுவிட்டுத்தான் இந்த நம்பிக்கை பெற்றிருக்கிறேன்.

நடக்க இருப்பவை

15--5--68

சென்னை 28-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு ஆதியப்ப நாயக்கன் தெருவில்; தலைவர்: ஆர். [illegible] சுந்தரம்; பேசுவோர்: துரை முருகன் பி.ஏ., துரைகலியரத்தினம் பி.ஏ., என். வி. என். செல்வம், எஸ். கஸ்தூரி பி. எஸ்சி., வா. பா. இளங்கோவன் பி.எஸ்சி., மற்றும் பலர்.

சென்னை 31-வது வட்டம்

வீராங்கனை வள்ளியம்மை பகுத்தறிவு மன்ற 11-வது ஆண்டு விழா; மாலை 7-மணிக்கு பெரம்பூர் படேல் சாலையில்; தலைவர்: மு. பாலகிருட்டினன்; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம் பி., இரா. சனார்த்தனம் எம்.ஏ., ஆர். வீரமணி பி.ஏ. பி.எல்., வி. தணிகாசலம் எம் சி., ம. ரா. சீனிவாசன்.

பெங்களூர் நகர

தி. மு. க. கிளைகளுக்கு;

"ஏற்கனவே தலைமைக் கழகத்தால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதற்கு ஒப்ப, பெங்களூர் நகர தி. மு. க. கிளைகளின் தேர்தல், மே 19-ந் தேதியும், வெளியூர்க் கிளைகளின் தேர்தல் மே 26-ந் தேதியும் நடைபெறும்; பகுதி, பாவட்ட, மாநிலத் தேர்தலுக்கான தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று கருநாடக மாநில தி. மு. க. அமைப்பாளர் தி. திராவிடமணி அறிவிக்கிறார்.

அஞ்சல் கட்டண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

10-காசுக்கு விற்றுவந்த உள்நாட்டு (இன்லண்டு) கவர் விலை 15-காசுக்கு உயருகிறது.

15-காசுக்கு விற்றுவந்த கவரின் விலை, 20-காசுகளாக உயருகிறது.

காசோலையில் (மணியார்டரில்) பணம் அனுப்புவதற்கு ரூ. 200 வரையில் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் 15-காசு கட்டணம் வசூலிக்கப்பட்டுவந்தது; இனி அது 20-காசுகளாக உயருகிறது; ரூ. 200-க்கு மேல் ஒவ்வொரு இருபது ரூபாய்க்கும் 30-காசுகள் கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

தந்திக் கட்டணமும் உயருகின்றன. முதல் எட்டு வார்த்தைகளுக்கு ரூ. 1-ஆக இருந்த கட்டணம், இப்போது ரூ. 1.20 ஆக உயருகிறது.

வாழ்த்துத் தந்திக் கட்டணம் 80 காசுகளிலிருந்து ரூ. 1-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

புத்தகத் தபால் (புக்-போஸ்ட்) கட்டணம் 50-கிராமுக்கு 10 காசுகளாக இருந்தது; அது இப்போது 15-காசுகளாக உயருகிறது; 50-கிராமுக்கு மேல் மேற்கொண்டு ஒவ்வொரு 25-கிராமுக்கும் வசூலிக்கப்படும் கட்டணம் 5-காசுகளிலிருந்து 10-காசுகளாக உயருகின்றன.

புதிய அஞ்சல் கட்டணம்—வெளிநாட்டு அஞ்சல் கட்டணம்—அஞ்சலில் பத்திரிகைகள் அனுப்புவதற்கான கட்டணம் ஆகியவையும் உயர்த்தப்படுகின்றன.

பழைய 6-காசு அஞ்சல் கார்டுகளில் ஒட்டுவதற்கான 4-காசு அஞ்சல் தலைகள் நாளைமுதல் விற்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.